வாரம் - 32 பேசிப் பழகுவோம் எண் - 30

# சொற்கள் , தொடர்கள் அறிமுகம்

## புதிய சூழலும் அதற்குரிய **சொற்களும்**

ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புதிய ஒரு சூழலை அறிமுகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் எதிர்கொள்கிற சூழல்களை வரிசைப்படுத்தி அவற்றுள் அதிக பயன்பாட்டுடைய சூழலைத் தேர்ந்தெடுக்கவும்

அந்தச் சூழலில் காணப்படுகிற பொருள்கள் , செயல்களின் பெயர்களைப் பட்டியலிடவும்.
சூழலில் பயன்படுகிற பேச்சுகளை வரிசைப்படுத்தி அவற்றை வினாவழியில் விளங்கிக் கொள்வதாக உரையாடல் வழியில் புரிந்து கொள்வதாக முறைபடுத்தவும். எளிய உரையாடல்களை வடிவமைக்கவும்.

இந்த உரையாடல்களை , பேசுவதற்கான தொடர்களை வகுப்பறையில் உரையாடலாக நிகழ்த்திக் காட்டி தமிழில் எவ்வாறு உரையாடுவது என்பதை மாணவர்கள் உள்வாங்கச் செய்யவும்.

**உரையாடல்கள் அயற்சொற்களற்ற தெளிதமிழாகவும் எளிய சொற்களாகவும் , அதிகப் பயன்பாடு உடையதாகவும் வினா விடையில் அமைந்ததாகவும் உருவாக்கவும் .**

# ஔ - வரிசை எழுத்துகள்




வலது புறம் ஒற்றைக் கொம்பு
இடது புறம் கொம்புக்கால் இருந்தால்
எழுத்துகள்
" ஔ " ஒலிப்புடன் ஒலிக்கின்றன

**இந்த வரிசையில் மூன்று**
**எழுத்துகளே அதிகம் பயனாகின்றன**
**எனவே அவற்றைப் படித்தால் போதும்**